**கமநல அபிவிருத்தி நிதியம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கமநல அபிவிருத்தி நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 பெப்ரவரி 10 ஆம் திகதிய ஜலதாரா ஆல்பங்கள் மற்றும் கையேடுகளின் பௌதிக இருப்பு பரிசோதனையில் ரூபாய்.32,000 தொகையான 08 ஜலதாரா ஆல்பங்கள் மற்றும் ரூபாய்.37,120 தொகையான 116 ஜலதாரா ஆல்பங்களின் பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன் அதன் கூட்டுத்தொகை ரூபாய்.69,120 மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | ஜலதாரா கையேடுகள் மற்றும் ஜலதாரா இருப்புத் தொடர்பில் பொறியியல் பௌதிக இருப்பு மீதி அறிக்கையின் அடிப்படையில் சீராக்கம் மேற்கொள்ளப்பட்ட போதிலும் 2023.02.10 ஆந் திகதிஇருப்பு மெய்மை ஆய்வு மீதிகளுக்கமைய தகவல்கள் நாளதுவரை ஆக்கப்படாமையால் இப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டின் போது சரியான மீதி ஒன்று நிதிக்கூற்றுகளில் சீராக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | பௌதிக இருப்பு பற்றாக்குறையை இனங்கண்டு கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கடந்த வருடத்தில் ரூபாய்.76,830 தொகையான உத்தியோகத்தர் பயிற்றுவிப்பு செலவினம் திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்படாது மீளாய்வாண்டின் செலவினம் ஒன்றாக காண்பிக்கப்பட்ட காரணத்தால் குறித்த செலவினத்தின் கணக்கானது அந்த அளவினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | முற்பணங்கள் தீர்க்கப்படும் ஆண்டினை அடிப்படையாகக் கொண்டு செலவினங்கள் இனங்காணப்படுகின்றது. அதற்கமைய உரிய வருடங்களின் வரவு செலவு திட்டங்களின் நிதியேற்பாட்டினை பயன்படுத்தி அச்செலவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | செலவினங்கள் உரிய வருடங்களில் சீராக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கடந்த வருடத்தில் பெப்ரவரி 23 ஆம் திகதி அம்பாறை கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு சாய்ந்தமருது கமநல சேவைகள் மத்திய நிலையத்தின் வேலியினை நிர்மாணிப்பதற்கு வழங்கிய ரூபாய்.244,000 இதொகையான முற்பண தொகையில் அவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள ரூபாய்.243,544 தொகை திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்படாது மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுகளில் விநியோகத்தினை மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்யும் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | முற்பணங்களை தீர்க்கும் ஆண்டினை அடிப்படையாகக் கொண்டு செலவினங்கள் இனங்காணப்படுகிறது. அதற்கமைய உரிய வருடங்களின் வரவு செலவு திட்டத்தின் நிதியேற்பாட்டினை பயன்படுத்தி அச்செலவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. | செலவினங்கள் உரிய ஆண்டுகளில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | கடந்த வருடத்திற்காக கிடைத்துள்ள 02 டயர்கள் உழவு இயந்திரங்களின் தவணை வருமானமான ரூபாய்.4,012,507 மற்றும் 2KR நீர் பம்பிகளின் தவணை வருமானமான ரூபாய்.3,020 என ரூபாய்.4,015,527 கூட்டுத்தொகை மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது. | ஒவ்வொரு வருடத்திற்குரிய தவணை வருமானத்தை எதிர்வு கூறிய குறித்த வருடத்தின் வரவு செலவு திட்டத்தில் உள்ளடக்கி அதன் அடிப்படையில் குறித்த வருடத்தின் செலவினங்கள் மேற்கொள்ளப்படும். அதற்கமைய ஆண்டினுள் கிடைக்கும் தவணை வருமானங்கள் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படாது ஆண்டின் வருமானமாக கணக்கு வைக்கப்படுகின்றது. | வருமானங்கள் குறித்த ஆண்டிற்கு சீராக்கப்பட வேண்டும். |
| (உ) | 2022 ஆம் ஆண்டில் டிசம்பர் 31 ஆம் திகதி உள்ள படியாக பெறவேண்டிய ஏக்கர் வரி 20 சதவீதமான வருமானம் ரூபாய்.15,738,225 ஆன போதிலும் நிதிக்கூற்றுகளில் அந்த வருமான ரூபாய்.3,466,975 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இவற்றுள் ரூபாய்.93,427 மீளாய்வாண்டிற்கும் ரூபாய்.3,373,548 கடந்த வருடத்திற்கும் உரியவை என்பது தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது. | சேவைகள் பிரிவினால் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைய உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் மூலம் குறித்த சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். | ஆண்டிற்கான வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஊ) | கமநல அபிவிருத்தி நிதியத்திற்கு சொந்தமான தற்போது நடைமுறையில் உள்ள ரூபாய்.12,468,763 கிரயமான நிலையான சொத்துக்கள் முழுமையாக தேய்விடப்பட்டிருந்த போதிலும் இந்த சொத்துக்களை மீள மீள்மதிப்பீடு செய்வதற்கு கணக்குகளில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கமநல அபிவிருத்தி நிதியத்திற்கு சொந்தமான சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து உரிய சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். | முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து கணக்கு வைக்க வேண்டும். |
| (எ) | 2023 பெப்ரவரி 10 ஆம் திகதி நீர் முகாமைத்துவ பிரிவில் மேற்கொள்ளப்பட்ட பௌதிக பரிசோதனைகளில் ரூபாய்.305,000 பெறுமதியான பயிற்செய்கை கூட்டங்கள் மற்றும் சிறு நீர்பாசன பராமரிப்பு புத்தகங்கள் 3,050 காணப்பட்ட போதிலும் | 2023.02.10 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதிக இருப்பு மெய்மை ஆய்வு தகவல்களை நாளதுவரை ஆக்கியிராத காரணத்தின் அடிப்படையில் ரூபாய்.305,000 பெறுமதியான பயிற்செய்கை கூட்டங்கள் மற்றும் | கணக்கு வைக்கப்படாத புத்தகங்களின் இருப்புகள் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அவற்றை பதிவேட்டுக்கு உட்படுத்தி இருப்பினுள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சிறு நீர்பாசன பராமரிப்பு புத்தகங்கள் 3,050 கணக்கு வைக்க முடியாதுள்ளது. எதிர்காலத்தில் கணக்கு வைக்கின்றேன். | |

### 1.5.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக நிதியத்தின் புத்தகங்களுக்கு இணங்க வைப்புக்கணக்கின் மீதி ரூபாய்.338,115,488 ஆன போதிலும் திறைசேரி புத்தகங்களுக்கு அமைவான மீதியானது ரூபாய்.338,767,636 ஆகும். அதற்கமைய நீண்ட காலமாக முன் கொண்டு வரப்படும் ரூபாய்.652,148 ஆன வேறுபாடு இனங்காணப்பட்டு தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2007 நவம்பர் 15 ஆம் திகதி வரையிலும் மக்கள் வங்கியில் தனியானதொரு கணக்கு பேணி செல்லப்பட்டு 2008 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் பிரதான கணக்குடன் ஒருங்கிணைப்பதற்கு முன்னர் ரூபாய்.651,797 ஆன வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் பரிசோதிப்பதற்கு நியமிக்கப்பட்ட குழு முன்மொழிந்துள்ள வேறுபாட்டுக்கு தாக்கம் அளித்துள்ள கொடுக்கல் வாங்கல்களை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதாகும். அதற்குரிய ஆவணங்கள் இல்லாமையால் இவ்வேறுபாடு இனங்காணப்பட்டு திருத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | வேறுபாட்டுக்கான காரணம் இனங்காணப்பட்டு தீர்க்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடந்த வருடங்களுக்காக கமநல சேவை மத்திய நிலையங்களுக்கு செலுத்த வேண்டிய 60 சதவீதமான வயல் காணிகள் வேறு பணிகளில் ஈடுபடுத்துவதற்கான அனுமதிப்பத்திர கட்டணங்களான ரூபாய்.4,484,078 மற்றும் மீளாய்வாண்டிற்குரியதாக அவ்வாறு செலுத்தப்பட வேண்டிய ரூபாய்.24,807 எனுமாறு ரூபாய்.4,508,885 கூட்டுத்தொகை நிதிக்கூற்றுகளில் ரூபாய்.11,642,560 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அத்துடன் ரூபாய்.7,133,675 தொகையான வேறுபாட்டுக்கு காரணங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை, | செலுத்த வேண்டிய அனுமதி பத்திர கட்டணங்களை கணிப்பிடும்போது காணிகளின் அனுமதி பத்திரங்களுக்காக தலைமை அலுவலகத்தில் இருந்து கிடைத்த பணத்தில் கமநல சேவை நிலையங்களுக்கு செலுத்த வேண்டிய 60 சதவீதத்தை கணிப்பீட்ட பின்னர் செலுத்த வேண்டிய அனுமதி பத்திர கட்டணங்கள் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்படும். அதற்காக விலைதிறன் விற்பனை பிரிவொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களை ஒப்பிட்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | ஆண்டிற்குரிய வருமானத்தை சரியாக கணக்கிட்டு கணக்கு வைக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுகளில் 02 டயர்களுடைய உழவு இயந்திர கடன்பட்டோர், 05 சக்கர உழவு இயந்திர கடன்பட்டோர் மற்றும் 2KR நீர் பம்பிகளின் கடன்பட்டோர் மீதிகள் பட்டோலைகளில் காண்பிக்கப்படும் மீதிகளுடன் ரூபாய்.10,412,595 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது திருத்துவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களின் மீதிகளுடன் இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நிதியத்தின் சேவைகள் பிரிவின் பதிவேடுகளுக்கு அமைய கடந்த வருடங்களுக்குரிய நிலுவை ஏக்கர் வரி வருமானம் ரூபாய்.41,398,774 ஆக காணப்பட்டதுடன் அந்த நிலுவையில் இருந்து நிதியத்திற்கு பெறவேண்டிய 20 சதவீதமான ஏக்கர் வரி வருமானம் ரூபாய்.8,279,755 ஆகும். எனினும் கடந்த வருடங்களுக்காக மீளாய்வாண்டில் ரூபாய்.20,657,106 ஆன ஏக்கர் வரி வருமானம் ஒன்று நிதியத்திற்கு கிடைத்திருந்ததுடன் அதனால் நிலுவை ஏக்கர் வரி வருமானத்தை சரியாக இனங்காண முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கடந்த வருடங்களில் நிலுவை ஏக்கர் வரி அளவானது தனித்தனியாக பெற்றுக் கொள்வதற்கு 2023 ஆம் ஆண்டு முதல் கூகுள் பத்திரம் தயாரிக்கப்பட்டு அனைத்து மாவட்ட அலுவலகங்களுக்கும் அனுப்பப்பட்டு கடந்த வருடங்களுக்கு பெறவேண்டிய ஏக்கர் வரி வருமானத்தை சரியாக இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட்டு உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். | வருமானங்கள் சரியாக இனங்காணப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்வுக்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திரண்ட நிதியத்திற்கு மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்களுக்கான பேரேட்டு பதிவுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமையால் அது இடம்பெற்ற சீராக்கங்களின் சரியான தன்மையை பரிசோதிக்க முடியாது இருந்தது. | 2022 ஆம் ஆண்டின் திரண்ட நிதியத்திலான சீராக்கங்களுக்கு உரிய பேரேட்டு பதிவுகள் தவறுதலாக நாளேட்டு கணக்குகளுக்கு பின்னிணைப்புகளாக காண்பிக்க முடியாது. | சீராக்கங்களுக்கு ரிய அனைத்து பேரேட்டு பதிவுகளும் நிதிக்கூற்றுக்களு டன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதியத்தினால் பல வருடங்களுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டு நிலையான சொத்துக்களாக நிதிநிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபாய்.4,870,082 தொகையான கணினி மென்பொருள் கட்டமைப்பின் பௌதீக உள்ள தன்மை மற்றும் பயன்பாடு தொடர்பில் விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. பொருள் மெய்மை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கட்டமைப்பின் நிலவுகை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதியத்தினால் பல வருடங்களுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டு நிலையான சொத்துக்களாக காண்பிக்கப்பட்டுள்ள ரூபாய்.4,870,082 தொகையான கணினி மென்பொருள் கட்டமைப்பு தொடர்பிலான தகவல்கள் பொருள் மெய்மை ஆய்வின் பின்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | கணினி மென்பொருள் கட்டமைப்பு காணப்பட்டதா என்பது மற்றும் அது பயன்படுத்தப்பட்ட தா என்பதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய பணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கமநல சேவைகள் மத்திய நிலையம் மற்றும் கமநல சங்கங்களுக்கு 2010 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த இருசக்கர உழவு ட்ரெய்லர்கள் | தவணைகளை அறவிடுவதற்கு கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகங்களுக்கு உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டு | கடன் மீதிகள் தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் 04 இயந்திர ட்ரெய்லர்களுக்காக 10 வருட காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபாய்.4,112,575 ஆன தொகை மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆலோசனை வழங்கப்பட்டு தவணைகளை அறவிடும் பணிகள் இடம்பெற்றவாறு காணப்பட்டது. கடன்பணத்தை அறவிடுவதன் துரித தன்மை குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | |
| (ஆ) | ஜப்பான் எண் உதவி செயற்திட்டத்தின் கீழ் 2006, 2008, 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ள 02 சக்கர உழவு இயந்திரங்களுக்கு அறவிடப்பட்டுள்ள பணம் 2015 ஆம் ஆண்டளவில் அறவிடப்பட வேண்டிய போதிலும் ரூபாய்.112,401,379 ஆன தொகை மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி உள்ள படியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஜப்பான் எண் உதவி செயற்திட்டத்தின் கீழ் 2006, 2008, 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ள 02 சக்கர உழவு இயந்திரங்களுக்காக 2022 டிசம்பர் 31 ஆம் திகதி அளவில் ரூபாய்.111,325,484 ஆன தொகை அறவிடுவதற்கு கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகங்களின் உரிய தரப்பினர்களுக்கு அறிவித்து அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. கடன் பணத்தை அறவிடுவதன் துரித தன்மை குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | கடன் மீதிகளை அறவிடுவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | கடன் கொடுத்தோர் மீதியினுள் உள்ளடங்கியுள்ள 05 மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டியதாக உள்ள ரூபாய்.2,464,983 தொகையான 2KR செயற்திட்டம் நீர் பம்பி தவணைகள் மற்றும் ரூபாய்.19,617,600 தொகையான 04 சக்கர உழவு தவணை மீதிகள் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபாய்.2,501,983 இரண்டு தொகையான KR செயற்திட்டத்தின் நீர் பம்பி தவணைகள் மற்றும் ரூபாய்.10,640,000 தொகையான 04 சக்கர உழவு இயந்திர தவணை மீதிகள் கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகங்களின் உரிய தரப்பினர்களுக்கு அறிவித்து அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இதுவரையிலும் தவணைகளை அறவிடுவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டவாறு காணப்படுவதுடன் அதற்குரிய அறவீடுகளின் துரித தன்மை குறைவான மட்டத்தில் காணப்பட்ட போதிலும் இதுவரையிலும் முறையாக அறவிடப்பட்டவாறு காணப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது. | கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2000 இன் 46 ஆம் இலக்க காநல அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் 97(2)(உ) மற்றும் | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த | 20 சதவீத ஏக்கர் வரி வருமானம் தொடர்பில் உரிய | ஏக்கர் வரி பங்களிப்பு பணம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | கமநல சேவைகள் ஆணையாளரின் 439/92 ஆம் இலக்க மற்றும் 1992 இன் ஆகஸ்ட் 03 ஆம் திகதிய சுற்றறிக்கை | ஆண்டிற்கான நிதிநிலைமைக் கூற்றின் பிரகாரம் ஏக்கர் வரி 20 சதவீதம் பெற வேண்டிய வருமானமான ரூபாய். 12,271,249 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அந்த 20 சதவீத ஏக்கர் வரி பங்களிப்பு பணத்தை அறவிடுதல் தொடர்பில் பதிவேடு ஒன்றும் பேணப்பட்டு இருக்கவில்லை. | தகவல்கள் மாவட்ட அலுவலகத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளப்படுவதுடன் இது தொடர்பில் விரிவான தகவல்கள் அடங்கிய கடன்பட்டோர் பதிவேடு ஒன்று உரிய கமநல சேவை நிலையங்களின் மட்டத்தில் பராமரிக்கப்படுகின்றது. | அறவிடுதல் தொடர்பில் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாண கோவை | | | |
| (i) | நி.பி.104(4) மற்றும் 156 | ஜலதாரா ஆல்பங்களின் தொடர் இலக்கத்தினை இட்டு பதிவேட்டிற்குட்படுத்தி உரிய பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தருக்கு பாதுகாப்பான முறையில் வைப்பதற்கு கையளிக்காமை காரணமாக ரூபாய்.100,000 பெறுமதியான 25 ஜலதாரா ஆல்பங்கள் கறையான்களால் அரிக்கப்பட்டு அழிவடைந்துள்ளதும் அந்த நட்டம் தொடர்பில் நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாலம்பே தரக்கட்டுப்பாட்டு நிலையத்தின் கூரைமேல் மரம் ஒன்று விழுந்தமையால் அதன் களஞ்சியத்தில் காணப்பட்ட 22 ஜலதாரா ஆல்பங்கள் சேதமடைந்துள்ளதுடன் அவற்றை இருப்பு புத்தகத்திலிருந்து அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளன. | விசாரணைகள் துரிதமாக ஆரம்பிக்கப்பட வேண்டும். |
| (ii) | நி.பி.371 | செயல் நிமித்த உப கட்டு நிதிகள் அது வழங்கப்பட்ட பணியானது நிறைவு செய்யப்பட்டவுடன் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக | இது தொடர்பில் சேவை பிரிவிற்கு அறிவிக்கப்பட்டு இந்த செயல் நிமித்த உபகட்டு நிதி 2023 ஆம் ஆண்டில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு | செயல் நிமித்த உபகட்டு நிதி வழங்கப்பட்ட பணி நிறைவடைந்ததும் உடனடியாக தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தீர்க்கப்படாத மீதிகள் ரூபய்.1,968,848 ஆக காணப்பட்டதுடன் 2019 டிசம்பர் 31ம் திகதியில் உள்ளபடியாக மாத்தளை மற்றும் வவுனியா கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூபாய்.70,000 மற்றும் ரூபாய்.85,000 தொகையான முற்பணத் தொகையும் உள்ளடங்கி இருந்தது. | அறிவுறுத்தப்பட்டது. | |
| (iii) | நி.பி.756 | நிலையான சொத்துக்கள் தொடர்பில் பிரமாணத்தின் பிரகாரம் வருடாந்த மெய்மை ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான சொத்துக்கள் தொடர்பில் வருடாந்த மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டது | திட்டவட்டமான தினமொன்றில் பொருள் மெய்மை ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 1978 டிசம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | சுற்றறிக்கைக்கமைய நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்படும் ரூபாய்.53,166,640 தொகையான ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டு இருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் தொடர்பில் விரிவான விபரங்கள் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் நிலையான சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் இறுதி கணக்கு பதிவுகளின் மூலமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எவ்வாறான போதிலும் நிலையான சொத்துக்கள் தொடர்பில் பதிவேடு ஒன்றினை எதிர்காலத்தில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 49,078,658 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 8,441,249 ஆகும். அதன் பிரகாரம் செயற்பாட்டு விளைவுகளில் ரூபா 40,637,409 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு ஏக்கர் வரி வருமானம் ரூபா 13,357,798 இனால் அதிகரித்தமை, அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் காணி மீட்டல் வருமானம் ரூபா 11,733,145 இனால் அதிகரித்தமை, பற்றுச்சீட்டு புத்தங்கள் மற்றும் குழுப் புத்தகங்கள் மற்றும் காசுப் புத்தக விற்பனை வருமானம் ரூபா 4,892,000 இனால் அதிகரித்தமை மற்றும் சிறு செலவினம் ரூபா 12,728,376 இனால் குறைவடைந்தமை பிரதானமான காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நிதியத்தினால் கமநல வங்கிகளின் கண்காணிப்பு செயற்திட்டம் மற்றும் கமநல அபிவிருத்தி செயற்குழுவிற்காக முகாமைத்துவ மென்பொருள் கட்டமைப் பொன்றினையும் தயாரிப்பதற்கு ரூபாய்.30,970,000 ஆன தொகைக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ரூபாய்.9,291,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் எந்த ஒரு பணியும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து கமநல வங்கிகளினதும் வலையமைப்பிற்கு உள்ளாக்கும் பணிக்காக குறித்த நிறுவனத்துடன் ரூபாய்.2,000,000 தொகையான Performance பிணைமுறி ஒன்றின் ஊடாக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன் ரூபாய்.7,959,290 தொகையான முற்பணப் பிணைமுறி ஒன்றுக்காகவும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறே இந்த செயற்திட்டத்திற்குரிய தரவுகள் மற்றும் தகவல்கள் அனைத்து கமநல சேவை மத்திய நிலையங்களையும் உள்ளடக்கும் வகையில் பெற்றுக் கொள்ளப்பட்டு அனைத்து கிராமிய வங்கிகள், கமநல அபிவிருத்தி செயற்குழுக்கள் மற்றும் பொலுஹர தகவல் தொழில்நுட்ப அலகு மற்றும் தலைமை அலுவலகத்தின் கிராமிய வங்கி பிரிவு, சேவை பிரிவு ஆகியவை இணைந்து நடாத்துவதற்கு பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கமைய நிறைவு செய்யப்பட்ட Digital கட்டமைப்பினை வெற்றிகரமான தகவல் கட்டமைப்பாக தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. | மென்பொருள் கட்டமைப்புக்குரிய பணிக்காக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் 31 ஆம் திகதியில் உள்ள படியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள 10 வருடங்களை விட பழமையான ரூபாய்.450,000 பெறுமதியான இருப்பு பற்றாக்குறை ஒன்று தொடர்பில் | 1996 ஆம் ஆண்டு முதல் நிதியத்தின் இறுதி கணக்குகளின் பற்றாக்குறையை பரீட்சித்துள்ள குழுவினால் இது தொடர்பில் உரிய தரப்பினர்களிடம் விசாரணை மேற்கொள்ளுமாறு பரிந்துரைத்துள்ளது. இது தொடர்பில் | விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டு நட்டம் அறவிடுப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒழுக்காற்று பிரிவு பிரிவிற்கும் அறிவித்துள்ளதுடன் அதற்கமைய எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு பணிகள் முன்னெடுக்கப்படும். | |
| (இ) | தனமல்வில கமநல சேவை நிலையத்தின் ஹெலபோஜுன்ஹெல நிர்மாணிப்புக்கான ஒப்பந்ததாரினால் கட்டுமாணம் இடைநடுவே நிறுத்தப்பட்டமையால் அதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபாய்.2,224,119 தொகையான செலவினம் விலைவவற்றதாகி இருந்தது. ஏற்பட்ட நட்டத்திற்கான செயலாற்றல் பிணைமுறி ஒன்று காசாக்கபட்டிருந்த போதிலும் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேற்கொள்ளப்படாத பணியின் பெறுமதியில் 20 சதவீததத்திற்கு சமனான ரூபாய்.626,693 ஒப்பந்ததாரரிடமிருந்து அறவிடப்படாது பணம் செலுத்தப்பட்டிருந்தது. | 2022.03.31 ஆம் திகதி குறித்த நிர்மாணம் தொடர்பில் இறுதிப்பட்டியல் ஒப்பந்ததாரரால் 2022.05.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் குறித்த பட்டியலின் பரிந்துரைகள் மற்றும் அங்கீகாரமளித்தலின் தாமதம் எஞ்சிய பணிகளுக்கு செலுத்த வேண்டிய பெறுமதியில் 20 சதவீத பெறுமதி அறவிடப்படாத போதிலும் திணைக்களத்தின் பெறுகை தீர்மானத்தின் அடிப்படையில் ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கை இரத்து செய்யப்பட்டு ரூபாய்.267,879 தொகையான செயலாற்றல் பிணை காசாக்கப்பட்டுள்ளது. மேலும் இது வரையிலும் மேற்கொண்ட பணிகளுக்காக பொறியியல் பணிப்பாளரினால் விதிக்கப்பட்ட பெறுமதிக்கு இணங்க ரூபாய்.1,120,482 தொகையைக்காக மாத்திரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிறைவேற்றப்படாத பணிகளுக்காக அறவிடப்பட வேண்டிய பெறுமதி தொடர்பில் பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் துரிதமாக அறவிடப்பட வேண்டும். கட்டுமான பணிகள் தாமதம் இன்றி நிறைவு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2022 செப்டம்பர் 15 மற்றும் 16 ஆகிய இரு திகதிகளினுள் அநுராதபுர மாவட்டத்தில் இடம்பெற்ற கமநல சேவைகள் செயற்குழுவின் அங்கத்தவர்களை ஊக்குவிக்கும் பயிற்சி நிகழ்ச்சி திட்டத்திற்காக ரூபாய்.4,286,755 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்காக பெயரிடப்பட்ட நபர்கள் பங்கு பற்றி இராத காரணத்தால் உணவுக் குடிபானங்கள் மற்றும் தங்குமிடத்திற்காக விலைவற்ற ரீதியில் ரூபாய்.89,710 செலுத்தப்பட்டிருந்தது. | இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதற்காக அநுராதபுரம் மாவட்ட அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | திட்டங்களுக்காக தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களை பங்குபற்ற செய்தல் கட்டாயமாக்கப்பட வேண்டும். |
| (உ) | 2010 ஆம் ஆண்டில் ஜப்பான் யென் உதவியின் கீழ் அநுராதபுரம் மாவட்டத்தின் மரதன்கடவல கமநல சேவைகள் நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்த 02 சக்கர உழவு இயந்திரங்கள் 02 விவசாயிகளுக்கு வழங்கப்படாது விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளரினால் பயன்படுத்துவதற்கு மற்றும் அவரின் பொறுப்பில் வைத்திருந்த காரணத்தால் அவருக்கு எதிராக 2016 மார்ச் 10 ஆம் திகதி ஒழுங்காற்றுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 2021 ஜனவரி 14 ஆம் திகதிஇந்த உத்தியோகத்தரின் | இதுவரையிலும் இது தொடர்பிலான தகவல்கள் சேவைகள் பிரிவிடம் காணப்படாததுடன் உரிய நடவடிக்கைகளை எதிர்காலத்தில் எடுப்பதற்குரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளன. | ஒழுங்காற்று நடவடிக்கைகளை துரிதமாக நிறைவு செய்து நட்டங்கள் அறவிடப்பட வேண்டும். |

ஓய்வூதிய பிரமாண கோவையின் 2 மற்றும் 12 ஆம் பிரிவுகளின் கீழ் ஓய்வு பெறச் செய்யப்பட்டிருந்த போதிலும் ஏற்பட்டுள்ள நட்டமான ரூபாய்.355,000 ஆன தொகை 2023 பிப்ரவரி 28 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 4. செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2000 ஆம் ஆண்டு முதல் நிதியத்தின் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு சரியானதாகும். | செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 4.1 வரவு செலவுத்திட்டக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பாதிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளபடியான வருமான விடயங்கள் 06 இற்கு உரியதாக 3.88 சதவீதம் முதல் 185.16 சதவீதம் வரையிலான விலகல்கள் நிலவின. | வருமான விலகல்களுக்கு தாக்கம் அளித்த காரணங்களாக 20 சதவீத ஏக்கர் வரி ஒரு ஏக்கருக்கு அறவிடப்படும் தொகை அதிகரித்தமை மற்றும் பயிர் செய்யப்படும் விவசாய காணிகளின் அளவு அதிகரித்தமை ஏக்கர் வரி அதிகரிப்பிற்கு காரணமாகி உள்ளது. பற்றுச்சீட்டு புத்தகங்களுக்கு அமைய விற்பனை வருமானம் 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடி அந்த வருமானத்திற்கு ஒப்பாக குறைவடைந்தமைக்கு காரணமாக அமைந்துள்ளது. எனினும் காசு புத்தக விற்பனை வருமானம் 2022 ஆம் ஆண்டில் ரூபாய்.1,300 ஆக காணப்பட்ட குழு காசு புத்தகத்தின் முதலாவதாக ரூபாய்.2,100 இற்கும் பின்னர் திருத்தப்பட்ட புதிய விலை ரூபய்.3,950 ஆகவும் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பின் அடிப்படையில் உத்தேச வருமானம் அதிகரிப்பிற்கு காரணமாக அமைந்துள்ளது. 02 சக்கர மற்றும் 04 சக்கர உழவு இயந்திரங்கள் மற்றும் நீர் பம்பிகளின் தவணைகளை பெற்றுக்கொள்ளல் துரிதமாக குறைவான மட்டத்தில் காணப்பட்ட போதிலும் கிரமமான முறையில் அறவிடப்பட்டவாறு உள்ளது. காணி அனுமதி பத்திரங்களை விநியோகிக்கும் வருமான மதிப்பீடானது முன்னைய வருடத்தில் கிடைத்த உண்மையான | பாதீடானது துல்லியமானதாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வருமானத்தின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்ற காரணத்தால் கடந்த வருடத்தின் பாதிடப்பட்ட வருமானத்தில் இந்த வருடத்திற்கான உள்ளபடியான வருமானம் மாற்றம் அடைவதற்கு காரணமாக அமைந்துள்ளது. மேலும் வயல் காணிகள் ஏனைய பணிகளுக்கு ஈடுபடுத்தியமையின் மூலம் கிடைக்கும் கோரிக்கைகளின் அளவோ வருடாந்தம் அதிகரித்தமை மற்றும் அதனால் மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் இருந்து கிடைத்த சேவை கட்டணங்கள் உயர்வான பெறுமதியினை கொண்டிருந்தமையும் இதற்கு காரணமாக அமைந்திருந்தது. | |
| (ஆ) | பாதிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவின விடயங்கள் 04 இன் 14 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான விலகல்கள் நிலவின. | புதிய விவசாய செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமை மற்றும் அமுல்படுத்தப்பட்டமை, அலுவலகம் தன்னியக்க மயப்படுத்தப்பட்டமை ஆகியவற்றுக்காக அதாவது விவசாய வங்கி முன்னோடி செயற்திட்டம் மற்றும் கமறல அபிவிருத்தி செயற்குழுக்காக முகாமைத்துவ தகவல் கட்டமைப்பு ஒன்றினை நிர்மாணிப்பதற்கு ரூபாய்.12,000,000 ஒதுக்கப்பட்டுள்ளது. பெறுகை நடைமுறை அமைய MGH Associates நிறுவனம் ரூபாய்.9,291,000 செலுத்தியுள்ளத்துடன் ரூபாய்.1.5 மில்லியன் பெறுமதியான கணினி இயந்திரங்கள் பெறுகை நடைமுறையை பின்பற்றி கொள்வனவு செய்யப்பட்டது. அதற்கமைய ஒதுக்கப்பட்ட ரூபாய்.15 மில்லியனில் ரூபாய்.10,791,000 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பாதீடானது துல்லியமாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட பாதீட்டிற்கமைய கமநல மத்திய நிலையத்தினை நிர்வகித்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கு ஆண்டினுள் எந்த பணியும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கமநல மத்திய நிலையத்தினை நிர்வகித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் அச்செயற்பாடுகள் 2023 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2022 ஆம் ஆண்டுக்கான புதிய விவசாய செயற்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படல் மற்றும் அமுல்படுத்தல் என்பதன் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபாய்.15 மில்லியனில் ரூபாய்.10,791,000 செலவிடப்பட்டுள்ளது. | பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள பணிகள் ஆண்டினுள் நிறைவேற்றப்பட வேண்டும். |